சுருக்கம்

நிலம் – குத்தகை – கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் (ம) தென்கனிக்கோட்டை வட்டங்கள் – இவ்விரு வட்டங்களில் அரசு புறம்போக்கு நிலங்களை குத்தகை வழங்குவதற்கு தடை விதித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வருவாய் (நி.மு.2) துறை

அரசாணை (நிலை) எண்.122 நாள்: 21.02.2006

படிக்கவும்:–

1. தர்மபுரி மாவட்டாட்சியரின் நேர்முகக் கடித எண். ஆர்.ஓ.சி.31317/99/Z2, நாள் 21.4.99.
2. நிலநிர்வாக ஆணையரின் கடித எண்.ந.க. இ2/19677/99, நாள் 1.2.2001.
3. அரசாணை (நிலை) எண்.49, வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 24.3.2003.

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை வட்டங்கள் பெங்களூருக்கு அருகாமையில் உள்ளதால், மேற்படி இரு வட்டங்களில் உள்ள நிலங்களின் மதிப்பு மிகவும் அதிகமாக உள்ளது என்றும், தற்பொழுது மேற்படி இரண்டு வட்டங்களிலுள்ள நிலங்களை ஒப்படை செய்வது தொடர்பாக தடையாணை உள்ளது என்றும், மதிப்புமிக்க அரசு நிலங்களை தனியாருக்கும், டிரஸ்டுக்கும் குத்தகைக்கு வழங்குவதில் இருந்து பாதுகாப்பது மிக அவசியம் என்பதால், மேற்படி, இரண்டு வட்டங்களில் நிலுவையிலுள்ள குத்தகைப் பிரேரணைகள் அரசு உத்தரவு பெற்றபின்தான் குத்தகைக்கு விடப்பட வேண்டும் என்றும், எனவே, இது தொடர்பாக உயர்மட்டக்குழு ஒன்றினை அமைத்து குத்தகை வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்யலாம் என கிருஷ்ணகிரி மாவட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

2. நிலநிர்வாக ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தனது அறிக்கையில், பெங்களூருக்கு அருகில் உள்ள ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை வட்டங்களில் உள்ள மதிப்புமிக்க நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்குவது உசிதமல்ல என்றும், ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை ஆகிய இரு வட்டங்களிலுள்ள நிலங்களை ஒப்படை செய்ய மற்றும் குத்தகைக்கு வழங்க தடைவிதித்து ஆணை பிறப்பிக்க அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை வட்டங்கள் மலைப்பிரதேசங்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

4. மேற்படி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையரின் பரிந்துரைகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டது.

Verified by RealEstate

5. நிலநிர்வாகஆணையர் பரிந்துரையினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டை ஆகிய இரு வட்டங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை வருவாய் நிலை ஆணை எண்.24ஏ–இன்கீழ் குத்தகைக்கு வழங்க, தடை விதித்து இதன்மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். ஆதிசேஷயா,
அரசு செயலாளர்.

பெறுநர்

நிலநிர்வாக ஆணையர், சென்னை–5.
மாவட்டாட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி.

நகல்:

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை–9.
வருவாய்த்துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
துணைச்செயலாளர் (நி.மு.) அவர்களின் தனி உதவியாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Verified PadiEstate